DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)
(In the Court of the Assistant Sessions, Sankarankovil)
S.C.No. 691 / 2018
*****

Deposition of Witness for Prosecution witness No: PW -11

LW -15

Name : முத்து பிரேம்சந்த்

Father`s Name :

Village :

Taluk :

Calling :

Religion :

Age :

Date : 10.03.2026

3. **( A1 to A5 absent.317 crpc petition filed and allowed. )**

Solemnly affirmed by Thiru.P.Mahindra Varma, Subordinate Judge, Sankarankovil in accordance with section 6(2) of Act No.44 of 1969.

**முதல் விசாரணை**

நான் தற்போது தேனி மாவட்டம், தென்கரை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 30.10.2016 ம் தேதியில் நான் பனவடலிசத்திரம் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பொருப்பில் இருக்கும்போது பனவடலிசத்திர காவல் நிலைய சார்பு ஆய்வாளர் பாலகிருஷ்ணன் என்பவர் பனவடலிசத்திரம் காவல் நிலைய கு.எண். 111/2016 சட்டப் பிரவு 147, 148,294(b), 323, 324,307,506(2) IPC ன் கீழ் வழக்கு பதிவு செய்திருந்தார். அது என்னிடம் காட்டப்படும் அச்சு **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.6** ஆகும். மேற்படி வழக்கு கோப்பினை அன்றைய தினம் 10.30 மணிக்கு புலன் விசாரணைக்கு எடுத்துகொண்டு 11.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் மொராஜி தேசாய், முத்துக்குமார் ஆகியோர்கள் முன்பு சம்பவ இடத்தை பார்வையிட்டு, பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்தேன். **பார்வை**

**மகஜர் அ.சா.ஆ. 7** ஆகும். **வரைபடம் அ.சா.ஆ.8** ஆகும், வழக்கில் சம்மந்தப்பட்ட சாட்சிகள் மொராஜிதேசாய், முத்துக்குமார், ராமர், கருப்பசாமி, சுப்பையா, ஆகியோர்களை வழக்கு சம்மந்தமாக விசாரித்து தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். 30.10.2016 ம் தேதி 16.30 மணிக்கு வழக்கில் சம்மந்தப்பட்ட 4 வது எதிரியான சங்கரன்பாண்டியன் என்பவரை கீழ நீலிதநல்லூர் மேல பஸ் ஸ்டாண்டில் வைத்து அங்கு இருந்த சாட்சிகள் வைரவன் மகன் பேச்சிமுத்து, மாடசாமி மகன் பேச்சிமுத்து ஆகியோர் முன்பு கைது விசாரித்த போது மேற்படி எதிரி தானாக முன் வந்து ெ சான்ன ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் முன்பு பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.9 ஆகும். மேற்படி எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமுலத்தன் அடிப்படையில் அன்றைய தினமே 17.30 மணிக்கு இந்த வழக்கின் 2 வது எதிரியாக கூறப்பட்ட பொன் செல்வராஜ சுகுமாறன் என்பவரை வீட்டில் இருந்த சுமார் 30 செம்மீ இரும்பு பாகம் 11 செ.மீ கொடுக்குப்பிடியுடன் கூடிய மொத்தம் 41 செ.மீ நீளமுள்ள இரும்பு அருவாள் ஒன்று மற்றும் சுமார் 121 செ.மீ நீளமும் 2 செமீ சுற்றளவு உள்ள கம்பி ஒன்றை அதே சாட்சிகள் முன்பு எதிரி அடையாளம் காட்டி ஆஜர் செய்ததை அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினேன். **அத்தாட்சி அ.சா.ஆ.10** ஆகும். அதன் பின்பு வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரிகள் பொன் செல்வராஜா சுகுமாறன் மற்றும் செல்வகுமார் ஆகியோர்களை அந்த இடத்தில் வைத்து கைது செய்தும், எதிரிகள் மற்றும் கைப்பற்றப்பட்ட சொத்துக்களுடன் நிலையம் வந்து எதிரிகளை மற்றும் கைப்பற்றப்பட்ட சொத்துக்களை படிவம் 95 மூலம் பதிவு செய்தும் , மற்றும் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். **படிவம் 95 அ.சா.ஆ.11** ஆகும். வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தான படிவம் 95 ல் கூறப்பட்டுள்ள **அருவாள் சா.பொ.ஆ. 1** ஆகும். **மற்றும் கம்பி சா.பொ.ஆ. 2** ஆகும். வழக்கில் சம்மந்தப்பட்ட சாட்சி பேச்சி முத்து, மற்றும் பேச்சி முத்து ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 01.011.2016 ம் தேதி இவ்வழக்கில் சாட்சிகள் நாகராஜ், பொன்ராஜ், ராமர், லட்சுமணன் மற்றும் ஈஸ்வரி, பாலமுருகன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு

செய்தேன். கடந்த 10.01.2017ம் தேதி வழக்கில் காயம்பட்ட நபர்களுக்கு சிகிச்சையளித்த மருத்துவர் ஆஷா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயம்பட்டவர்களின் காயச்சான்று பெற்றேன். நாகராஜ் என்பவரின் காயச்சான்று அ.சா.ஆ. 12 ஆகும். பொன்ராஜ் என்பவரின் **காயச்சான்று அ.சா.ஆ. 13** ஆகும். லட்சுமணன் என்பவரின் காயச்சான்று **அ.சா.ஆ. 14** ஆகும். **ராமர்** என்பவரின் **காயச்சான்று அ.சா.ஆ. 15** ஆகும். அதன் பின்பு எனது விசாரணையை முடித்து சம்பவம் உண்மையென தெரியவந்ததால் 10.01.2016ம் தேதி எதிரிகள் பிரகாஷ் மற்றும் பொன்செல்வ ராஜ்சுகுமாறன் ,செல்வகுமார், சங்கர்பாண்டியன், சீனியம்மாள் ஆகியோர்கள் மீது 147, 148, 294(b), 323, 324, 307, 506(2) IPC ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

நான் சொல்லிய நாள் நேரத்தில் அ.சா1ம் மருத்துவமனையில் வைத்து புகார் வாக்குமூலம் பெறப்பட்டதாக சொல்வது உண்மையில்லை என்றால் சரியல்ல. அ.சா1 புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் அ.சா.2 முதல் அ.சா.4 வரை விசாரணை செய்ததாக சொல்வது உண்மையில்லை என்றால் சரியல்ல. நான் சம்பவம் இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்ததாக சொல்வதும், சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாக சொல்வதும் உண்மையில்லை என்றால் சரியல்ல. சாட்சிகள் முன்னிலையில் வழக்கில் கண்ட 4வது எதிரியை கைது செய்து அவரிடம் பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் வழக்கு சொத்தான அருவாள் மற்றும் கம்பி ஆகியவற்றை கைப்பற்றியதாக சொல்வது உண்மையில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்து இந்த வழக்கிற்காக எங்கள் காவல் நிலையத்தில் வைத்து உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் கண்ட மற்ற எதிரிகளை கைது செய்ததாக சொல்வது எல்லாம் உண்மையில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 முதல் அசா.4 வரை உள்ள நபர்களுக்கு ஏற்பட்ட காயத்திற்கு மருத்துவரை விசாரித்து காயச்சான்று

பெற்றது உண்மையில்லை என்றால் சரியல்ல. நான் சொன்னவாறு, சொல்லிய நாள் மற்றும் நேரத்தில் எந்தவொரு சம்பமும் நடைபெறவில்லை என்றாலும், இந்த வழக்கிற்கும், எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. அ.சா.1 முதல் அசா.4 வரை உள்ள நபர்களுக்கு ஏற்பட்ட காயத்திற்கும் இந்த எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை

Sd/–P.Mahindra Varma,
Subordinate Judge,
Sankarankovil.